கருங்காலக்குடியில் அரிசன குடியிருப்பு.

*வினா எண். 567—திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1972-ம் ஆண்டில் கருங்காலக்குடியில் அரிசனங்களுக்காக கட்டப்பட்ட குடியிருப்புகளில் பயன் பெறும் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனரா?

(ஆ) இல்லையெனில், அது குறித்து எடுக்கப்பெற்றுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) இந்த வீடுகள் சரியானபடி கட்டப்படாததால், பயன் பெறும் மக்கள் இவைகளில் குடிபுகவில்லை.

(ஆ) இந்த வீடுகளை சரியான முறையில் கட்டப்படாததற்கு காரணமான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு முடிந்தபின் இந்த வீடுகளை மக்கள் குடியேறத்தக்க வகையில் திருத்தி அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

Homes for Harijan and under-privileged children

*Q No. 568—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state —

(*a*) whether there are proposals under the examination of the Government to set up Cheshire Homes for Harijan and under-privileged children in this State; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) இம்மாநிலத்தில் அரிசன மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய இனத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு செஃசயர் இல்லங்கள் திறப்பது குறித்து அரசின் பரிசீலனையில் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிவுறறவர்களுக்கும் உடல் ஊனம் உற்றவர்களுக்கும் இனிமேல் தமிழ்நாட்டில் செஃசயர் இல்லத்தை ஆரம்பிக்கக்கூடிய திட்டத்தைப் பரிசீலித்து அதற்கான நடவடிக்கை எடுக்குமா?